இதழ் 09 மலர் 03
ஓகஸ்ட் 2013– ஒக்ரோபர் 2013

'தலைவி' காலாண்டு இதழ்
இல. 03, ரொறிங்ரன் அவனியூ,
கொழும்பு - 07.
தொ.பேசி: 0112 506272
தொ.நகல்: 0112 585190
மின்னஞ்சல்: info@viluthu.org

காலாண்டு இதழ்

# தலைவி

தலைமைத்துவத்தை நோக்கி...


## அவலமுறும் நம் மக்களுக்கு விடிவு எப்போது?

நம் நாட்டில் யுத்தம் முடிந்துவிட்டதாகத்தான் எல்லோரும் நினைக்கின்றார்கள். ஆனால் திருமலை மாவட்டத்தில் சம்பூர் பிரதேசம் சென்று வருபவர்களுக்குத்தான் தெரியும் நம் நாட்டில் யுத்தம் இன்னும் மக்களை வாட்டிக் கொண்டுதான் இருக்கின்றதென்று. ஆம்! அம் மக்கள் இன்றும் தம் அவலவாழ்வினை அகதிமுகாம்களுக்குள்தான் தொடர்கின்றனர். அன்றாட ஜீவனோபாயத்துக்கே அல்லாடும் நிலையில்தான் உள்ளனர். தமது காணிநிலங்களைத் தமக்குத் தரும்படி கேட்டதற்காகத் தமக்குக் கிடைக்கும் நிவாரணங்கூட நிறுத்தப்பட்டுள்ளதாகப் பொருமுகின்றனர். இந்நாட்டில் சம்பூர் மக்கள் செய்த பாவம்தான் என்ன? குடும்பத் தலைவர்களை இழந்து பரிதவிக்கும் பெண்களின் நிலைமையென்னவென்று பிறருக்குத் தெரியாது. அன்றாட உணவுக்கு அவர்களின் குழந்தைகள் ஏங்குகின்றனர். விவசாயக் காணிகளுக்கு உரிமையாளர்களாகவிருந்தும் அம்மக்கள் இன்று ஒருபிடி உணவுக்கும் வழியின்றித்தான் தவிக்கின்றனர். காணாமற்போன தம் கணவர்-பிள்ளைகள்-பெற்றோர்கள் எப்போது வருவார்களென்று உறவுகள் தவித்தவண்ணமுள்ளன. அவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா இல்லையாவென்று ஏங்கி ஏங்கியே இறந்து போனவர்களும் உண்டு. இன்றுவரை சிறையிலிருக்கும் தம் உறவுகளுக்கு எந்தவொரு பாதுகாப்புமில்லையென மனமுடைந்து போய் இருக்கின்றார்கள்.

எம்மிற் சிலர் தொலைக்காட்சியில் நடக்கும் நாடகங்களைப் பார்த்து அழுகின்றோம். ஆனால் நம் நாட்டில் நாளாந்தம் கண்ணீரும் கம்பலையுமாக ஒரு தரப்பு உள்ளதனை என்றாவது சிந்தித்திருக்கின்றோமா? யுத்தம் முடிந்த பின்னும் அகதிமுகாம்கள் ஏன் உள்ளனவென்று கேள்விக்கணை தொடுத்திருக்கின்றோமா? வட-கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், நிலைமைகள் பற்றி உங்கள் மனதில் ஏதேனும் கேள்விகள் எழுகின்றனவா? அம்மக்களின் காணிநிலங்களைப் பறிமுதல் செய்தது எதற்காக? குறித்ததொரு சமூகத்தின் உயிர்நாடியான விவசாய நிலங்களையே தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயமாக்குவது எதற்காக? ஒரு சிங்களக் குடிமகன் கூட இல்லாத இடங்களில் புத்தர் சிலைகள் அமைப்பதும், யுத்தம் முடிந்தும் தமிழ் பேசும் மக்களின் காணிநிலங்களில் சிங்களக் குடியேற்றங்களும் தொடர்வது ஏன்? நாளாந்தம் கடலுடன் போராடி வாழும் மீனவமக்களின் காணிநிலங்களைச் சுற்றுலாப் பிரதேசங்களாக மாற்றுவதும், யுத்தத்தின் பெயரால் கைது செய்யப்பட்டவர்கள் யுத்தம் முடிந்த பின்னும் சிறைகளில் வாடுவதும் நம்நாட்டில் மட்டும்தான் நடக்கும் நிகழ்வுகள். இன்னமும் சம்பூர் பிரதேச மக்களுக்குக் குடிசை வாழ்வுதான் மிச்சம். உங்கள் சொத்து வேண்டாம் - பணம் வேண்டாம் - உங்கள் குடும்பங்களிலுள்ள ஒருவரின் குரல் மாத்திரம் இவர்களுக்காக ஒலிக்கட்டும். எம்மக்களுக்காக இணைந்து பணியாற்ற எங்களுடன் இணையுங்கள்.

திருமலை மாவட்டப் பெண்கள் சமாசம்






## அன்புத் தோழியரே !

அனைவருக்கும் வணக்கம்!

உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. விழுது தற்போது விதவைகள் பட்டயம் தொடர்பான தொடர் பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக விதவைகள் போரங்களுடனான ஆலோசனைகளைப் பெறுவதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி ஆய்வுகளையும் குறித்த மாவட்டங்களில் நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதன்வழி நாம் சிறந்ததொரு விதவைகள் பட்டயத்தினை நம் நாட்டிலுள்ள விதவைகளுக்கென முன்மொழிய வாய்ப்புக்கள் எற்படுமென முழுமையாக நம்புகின்றோம். இதன் இறுதி வடிவம் நொவெம்பர் மாதம் நடைபெறவுள்ள விதவைகள் மாநாட்டில் குடும்பத் தலைமை தாங்கும் பெண்களினால் விழுதின் வழிகாட்டலுடன் சமர்ப்பிக்கப்படும்.

புதியதொரு அரசியற்பாதை வடமாகாண மக்களுக்காக அடித்தளமிடப் பட்டிருக்கின்றது. இரு தசாப்தங்களுக்குப் பின்னர் நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தல் தமிழ்மக்களின் மாபெரும் வெற்றியினை உலகிற்கும், இலங்கை அரசுக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அதிலும் போட்டியிட்ட பெண்களுக்குக் கிடைத்த வெற்றியின் நம்மையெல்லாம் பெருமை கொள்ள வைக்கின்றது. வியப்படைய வைக்கின்றது.

பெண்கள் மற்றும் சிறுவர்களின் போசாக்கு நிலைமை மிகவும் பின்னோக்கிச் செல்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில், குறிப்பாக, மூதூர் பிரதேசத்தில் சுமார் எழுபத்தைந்து வீதமான குடும்பங்கள் போஷாக்குநிலையில் மிகவும் பின்தங்கியுள்ள, உணவுப்பாதுகாப்பு பற்றிய அக்கறையின்றி உள்ள குடும்பங்களாகும். எது எவ்வாறாயினும் எமது அடுத்த தலைமுறையினைக் போஷாக்கு விடயத்தில் காப்பாற்றுவது மிகமுக்கியமல்லவா? சங்கக் கூட்டங்களிலெல்லாம் இதனைப் பற்றிய விழிப்புணர்வினை உங்கள் அங்கத்தவர்களுக்கு வழங்கலாம். எமது அலுவலர்களைத் தொடர்பு கொண்டு வாசகர்வட்டத்தில் இதனைப் பற்றிக் கலந்துரையாடி என்ன செய்யலாம் என்று தீர்மானிக்கலாம். ஏன் இதனைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வினைத் தர மருத்துவமாதுக்கள், வைத்திய அதிகாரிகள், நிறுவனங்கள் என அனைவருமே தயாராகவிருக்கின்றனர். ஆனால் என்ன செய்வது நமக்குத்தான் நேரமில்லையே. சற்று யோசியுங்கள்

இன்னும் நம் பிரதேசங்களில் சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவது குறைந்தபாடாயில்லை. சட்டம் இறுக்கமாகக் கடைப்பிடிக்காத்தன்மையினால் அரசியற்பலத்தின் உதவியுடன் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வது சாதாரண விடயமாகிவிடும். ஒவ்வொரு மாதமும் ஒக்ரோபரில் மட்டும் இதனைப் பற்றி அதிகம் கதைப்பதில் ஒரு பிரயோசனமுமில்லை. நாம் ஒவ்வொருவரும் இப்பிரச்சினையிலிருந்து எமது இளஞ்சமூகத்தினைக் காப்பாற்றவேண்டுமென்ற உந்துதலை மனதளவில் உள்ளெடுக்காவிடில் இதனைக் குறைப்பது சாத்தியமாகாது. அதற்காகவே இம்முறை விழுதும் தெற்கிலுள்ள வேறு சில நிறுவனங்களும் இணைந்து அதிகரித்துவரும் சிறுவர் துஸ்பிரயோகங்களைக் குறைக்கும்முகமாக ஒவ்வொரு சிறாருக்கும் அறிவூட்டும் விதத்தில் நோ-றன்-ரெல் (No-Run-Tell) பிரசார நடவடிக்கையினை மாவட்டந்தோறும் முன்னெடுத்து வருகின்றோம். இது சிறார்களுக்கு நல்ல தொடுகை - கெட்ட தொடுகை- கெட்ட தொடுகையிலிருந்து தப்புதல் போன்ற விடயங்களினைக் கற்றுத் தருவதாகும். இப்பிரசார நடவடிக்கை துஸ்பிரயோகங்களின் தொகை வீழ்ச்சியடையும்வரை தொடரும். இதற்கு அனைத்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் விழுதின் தன்னார்வத் தொண்டர்களும் தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது. இந்த இணைந்த செயற்பாடு ஓரளவாவது எமது பிரதேசங்களில் வெற்றியினைத் தருமென நம்புகின்றோம். அதுமட்டுமல்லாமல் இறுக்கமான சட்ட ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அழுத்தம் கொடுக்கவும் உதவலாம்.

இறுதியாக, எம்முடன் இணைந்துள்ள தன்னார்வத் தொண்டர்கள் பலர் தமது மக்கள் பணிகளை ஆரம்பித்துள்ளனர். அதற்கான பயிற்சிகளும், வழிகாட்டல்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் உங்களுடனும் இணைந்து அவர்கள் பணியாற்றுவார்கள். அதன்வழி நம் சமூகத்தில் ஒரு மாற்றம் ஏற்படுமென்ற நம்பிக்கையுடன் மீண்டும் சந்திக்கும் வரை...

அன்புடன்

**- இந்து -**

# வாழ்த்துகின்றோம்!

## சமாதானத்திற்கான சர்வதேச விருதினைப் பெற்றார் தவச்சிறி




நாடுகளில் போர்கள் இடம்பெறும்போது பெரிதும் பாதிப்படைவது அங்கு வாழும் பெண்களும் குழந்தைகளுமே. அதன்பின்னருங் கூட போரில் அகப்பட்டு உயிரிழந்த பெற்றோருக்காக ஏங்கித் தவிக்கும் குழந்தைகளும் பெண் தலைமைத்தாங்கும் குடும்பங்களும் என அவர்களது துயரம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இதனாற்தான் ஐ.நா பாதுகாப்பு சபையின் பிரேரணை 1325 போரின்போதும், அதன்பின்னருங்கூட பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு சகலநாடுகளாலும் கட்டாயமாகக் கவனத்துக்கு உட்படுத்த வேண்டுமென வலியுறுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல் இதனை மீறுவோர் பாதுகாப்புசபையின் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டுமெனவும் எச்சரிக்கின்றது. அதேநேரம் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றும் தனிநபர்களை ஊக்குவித்து, அவர்களைச் சமாதானத்தின் காவலர்களாக அங்கீகரித்துப் பற்பல விருதுகளையும் வழங்கி காலத்துக்குக் காலம் கௌரவப்படுத்தியும் வருகின்றது. அந்தவகையிலேயே "என் (N) சமாதான விருது" என்பதும் மிகவும் கௌரவம் மிக்க விருதாகும். இந்த விருது ஆசியப் பிரந்திய நாடுகளில் பணியாற்றும் சமூகப்பணித் தலைவர்களுக்காகக் குறிப்பாகப் பெண் தலைவர்களுக்கு வழங்கப்படுவதாகும். ஆனால் இவ்வருடம் ஆறு பெண்களுடன் ஒரு ஆணும் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டமை இவ்விருது வழங்கலில் ஒரு மைல்கல்லாக அமைகின்றது.

மக்கள் வாழ்க்கையில் சமூகமாற்றங்களையும், சமாதானத்தினையும் கொண்டுவரப் பாடுபடும் மக்களின் சேவைகளைப் பாராட்டி, கூடியளவில் பெண்களை இலக்கு வைத்து வழங்கப்படும் இந்த விருது வழங்கல் நடவடிக்கையானது ஆசிய பிராந்தியததில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் (யுஎன்டிபி) மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வருடம் எமது நாட்டிலிருந்து அதுவும் வடபுலத்தின் வன்னிப் பிரதேசத்திலிருந்து ஒரு பெண் இவ்விருதினைத் தனதாக்கிக் கொண்டுள்ளார் என்பது எம்மவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தரும் ஒரு விடயமாகும். யார் அந்தப் பெண்மணி?




வன்னிப் பகுதியிலிருந்த மக்களுக்கு மிகவும் நெருக்கடியான காலகட்டத்தினுள் தன்னால் இயன்ற ஆதரவுகளை வழங்கிவந்த ஒரு பெண்மணிதான் திருமதி. தவச்சிறி சார்ள்ஸ் விஜயரட்ணம். யுத்தகாலத்திலும், அது முடிவடைந்த பின்னரும் அங்கு வாழ்ந்துவரும் பெண்கள் மற்றும் சிறார்களின் நலன்களுக்காகப் பணியாற்றும் தவச்சிறி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருநகர் வடக்கு பகுதியினைச் சேர்ந்தவர். "செல்வி அக்கா" என அனைவராலும் அடையாளப் படுத்தப்படும் தவச்சிறி தனது தந்தையாரின் வழிகாட்டலில் சமூகசேவையில் ஆர்வங் கொண்டு வளர்ந்தவர். பல சமூகமட்ட அமைப்புக்களில் அங்கம் வகித்த இவர் தற்போது தமது பகுதியின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும், பிரதேச செயலக மட்டத்திலான பெண்கள் அபிவிருத்தி சம்மேளனத்தின் பொருளாளராகவும் செயற்பட்டுத் தன் மக்கள் பணிகளை முன்னெடுத்து வருகினறார். குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியிலேயே இவரது பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. "எமது சமூகத்தின் தேவைக்காகப் பலவருடங்களாகப் பொறுமையுடன் சேவை செய்து வந்தமைக்குக் கிடைத்த வெகுமதியே இந்த விருது. இது என்னை மேலும் பாதிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களை நோக்கிப் பணியாற்ற ஊக்குவிக்கின்றது" என்று அடக்கத்துடன் தெரிவிக்கின்றார் தவச்சிறி. இவருடன் இன்னும் லெஸ்டே, இந்தோனேசியா, தீமோர், நேபாளம், ஆப்கானிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய ஆறு நாடுகளைச் சேர்ந்த நபர்களுக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை சமாதானத்தின் பாதையில் பல நாடுகள் பயணிப்பதனை நமக்குத் தெரியப்படுத்துகின்றது. எமது நாட்டுக்கும், மக்கள் பணியாளர்களுக்கும் நம் பெண்களுக்கும் பெருமை சேர்த்த தவச்சிறியின் செயற்பாடுகள் மென்மேலும் இனம்-மதம்-மொழி-பிரதேசம் என்ற வேறபாடுகளைக் கடந்து யாவர்க்கும் கிட்ட சந்தர்ப்பங்கள் அமையவேண்டுமென தலைவியும் தன் வாழ்த்துக்களைக் கூறுகின்றாள்.

# அரசியலில் பெண்கள்: சாத்தியமா?



தலைமைத்துவத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் "தலைவி" செய்திமடலின் ஊடாக நாளைய அரசியற்பயணத்தில் நாம் கைகோர்ப்பது பற்றிய எனது கருத்தை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அரசியல் என்பது சாக்கடை என்று நாம் கருதுகின்றோம். ஆனால் அதனைப் புரிந்து கொண்டு செயற்படுவோமாயின் அவ்வாறானதொரு எண்ணமே எம்மிடமிருந்து எழாது. நம் போன்ற பெண்களை அரசியலில் நுழையவிடாமல் சில சுயநலவாதிகளால் இட்டுக்கட்டப்பட்ட கதைதான் இந்த சாக்கடை என்ற சாட்டு. ஆண்கள் சாதிக்கமுடியாததை அரசியலில் எம்போன்ற சமூகசேவையில் ஈடுபடும் பெண்கள் இலகுவாகச் சாதிக்கமுடியும் என்பதே எனது அபிப்பிராயம். இது அனைத்து மாதர்களின் அபிப்பிராயமாகவும் இருக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

மக்கள் பலமிருந்தால் நாம் எதனையுமே சாதிக்கலாம். இந்த அரசியலுக்கு முக்கியமாகத் தேவைப்படுவதும் மக்கள் எதிர்பார்ப்பதும் நாம் அவர்களுக்கு என்ன செய்யப்போகின்றோம் என்பதைத்தான். அதைத்தானே சமூகஅமைப்புக்கள் மூலமாக நாம் செய்து கொண்டிருக்கின்றோம். பெண்களாகிய எம்மை வீட்டுடனேயே நிறுத்திவிட வேண்டும் நாம் அரசியலில் வந்தால் நல்லதொரு மாற்றத்தைக் கண்டுவிடலாம். அதை மக்கள் கண்டுவிட்டால் இனி எந்தக் காலத்திலும் ஆண்கள் அரசியலில் வரமுடியாதென்ற எண்ணத்தில்தான் உள்ளூராட்சி மன்றங்களிலும் சரி பாராளுமன்றங்களிலும் சரி பெண்களுக்கான பெயர்நியமனங்களைக் கணிசமானளவில் மட்டுப்படுத்தி வைத்துள்ளனர். நமக்கு இவர்கள் பயப்படுகின்றார்கள் என்பதே எமது செயற்பாட்டின் முக்கியத்துவத்தினை விளக்குகின்றதல்லவா?

ஆனாலும் இதனைச் சில பெண்களே விளங்கிக் கொள்வதில்லை. அதனை விளங்கிக் கொள்ளவும் சிலர் விடுவதில்லை. பெண்களை ஒரு வட்டத்திற்குள்ளேயே வைத்திருக்க வேண்டும் என்ற குறுகிய மனப்பாங்கு காரணமாகச் சமூகபணியில் தைரியமாக ஈடுபடும் பெண்கள் கூட அரசியல் என்று வரும்போது கொஞ்சம் தள்ளியே நிற்கின்றனர். இந்தநிலைமை மாறவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட அபிப்பிராயமாக இருந்தாலும் கூட இந்த மாற்றத்தை எனக்குள் ஏற்ப்படுத்தியது விழுதே.

திடீரென இலாபம் சம்பாதிக்க அரசியலுக்குள் வருபவர்களுக்குத் தெரியாது நமது மக்கள் என்ன தேவைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்பது. ஆனால் சமூகப்பணியில் ஈடுபடும் எமக்குத் தெரியும் நாம் என்ன அபிவிருத்திகளை மேற்கொண்டால் நமது சமூகத்தை முன்னோக்கிக் கொண்டுவரலாம் என்பது. மக்கள் பங்கேற்புடனான நல்லாட்சியிலேயே மக்களின் எதிர் காலம் தங்கியுள்ளது. தங்களின் பலம் புரியாமலே சில பெண்கள் எவ்வளவோ திறமைகளை வைத்துக்கொண்டு அரசியலில் வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர் ஆனால் இப்படியான பெண்களுக்குப் பக்கபலமாக நின்று அரசியலில் புகுத்துவதற்கு விழுது மேற்கொண்ட சில நடவடிக்கைகளைப் பார்த்தபோது மிகவும் வியப்பாக இருந்தது. சென்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் பெண்களுக்கான பெயர்நியமனங்களை வழங்கச் செய்வதற்குப் பல கட்சிகளுடனும் பேரம்பேசி செய்த முயற்சிகள் வித்தியாசமானவை. எந்தவொரு அமைப்புமே முன்னின்று செய்யாத காரியத்தை விழுது செய்தது. பெண் வேட்பாளர்கள் குறைந்தவாக்குப் பெற்றிருந்தாலும் இனிவரும் தேர்தல்களில் அச்சமின்றிப் பெண்கள் வருவார்களென்பது உறுதி.

ஒரு சிறிய மாற்றம் தான் மாபெரும் மாற்றமாக மாறும் என்ற நம்பிக்கை என் போன்ற சிலமாதர் சங்க உறுப்பினர்களிடையே இன்று ஏற்பட்டுள்ளது இந்தமாற்றத்தை உருவாக்கியது விழுது. இந்தமாற்றம் தலைவி ஊடாக ஏனைய மாதர்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவினாலேயே உங்களுடன் இக்கட்டுரையைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

சுமங்கலா கிட்ணபிள்ளை
மட்டக்களப்பு.

# மீன்பாடும் தேனாட்டில் ஒதுங்கிவாழும் "சிவபுரம்" கிராம மக்கள்

அனலாகத் தகிக்கும் நிலமும், வீசும் அனற்காற்றும் நிரந்தரமாகக் குடிகொண்டதொரு சிறிய கிராமம்தான் இந்த சிவபுரம் கிராமம். பெயர்தான் என்னவோ நம்மை நிம்மதியாக மூச்சுவிடச் செய்கின்றதே தவிர அங்கு சென்று வந்தவர்களுக்கு மிஞ்சுவதோ வேதனைதான். ஆம் அவ்வளவு துயரமானநிலையில் இருக்கின்றது அம்மக்களின் நிலைமை.



ஒருநிலையில் எம்மைப் பாலைவனம் என்றால் இப்படித்தான் இருக்குமோ என்று நினைக்கச் செய்கின்றது அதன் தோற்றம்.


மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சுமார் பதினெட்டு கிலோமீற்றர் தொலைவில் செங்கலடி பிரதேச செயலர் பிரிவில் பெரிய சவுக்கடி என்ற கிராமசேவகர் பிரிவில் உள்ள ஒரு சிறிய கிராமமே இந்த சிவபுரம். பெயர் இந்துக்களின் கிராமமாக அமைந்திருந்தாலும் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இங்கு அறுபத்தெட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 240 பேர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித்தொழிலில் தங்கியிருப்பவர்களாக உள்ளனர். நாலைந்து குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் மத்தியகிழக்கு நாடுகளிற் பணியாற்றுகின்றார்கள். அங்குள்ள மொத்தக் குடும்பங்களில் நான்கிலொரு பங்கினர் பெண்தலைமைத்துவக் குடும்பங்களாவர். கடும் உழைப்பாளிகளாக இந்த மக்கள் இருந்தாலும் அவர்களின் உழைப்புக்கான வளங்களோ, சூழலோ அமையாததுதான் இங்குள்ள பெரியகுறை.

எண்பத்து மூன்றிலே இடம்பெற்ற வன்முறையிலிருந்து தொடர்ச்சியாகவே புல்லுமலைப் பிரதேசத்திலிருந்து ஐந்துக்கும் மேற்பட்ட தடவைகள் மாறி மாறி இடம்பெயர்ந்து, தம் உறவுகள், உடைமைகள் அனைத்தையும் இழந்த ஏதிலிகளாகவே இவர்கள் இன்றுவரை தம்மை அடையாளப்படுத்துகின்றமை மனவருத்தத்திற்குரியது. 2007 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் தங்களிடம் இனி இழப்பதற்கு ஒன்றுமே இல்லையென்கின்ற நிலையில் தனியாரொருவருக்குச் சொந்தமான காணியில் இந்த மக்கள் தஞ்சமடைந்து கடந்த ஏழு வருடங்களாக அதில் வாழ்ந்து வருகின்றனர்.

மீளவும் அவர்களது பிரதேசத்திற்குத் திரும்பிச் செல்லுமாறும், அவர்களுக்கு எல்லாவித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படுமென மீள்குடியேற்ற அதிகாரிகளால் அறிவுறுத்தப்படுகின்ற போதும், அங்கு அவர்கள் வாழ்வதற்குத் தயாராகவில்லை. இங்கும் கூட இவர்களுக்கான நிரந்தர வீடு, மலசலகூடம் மற்றும் குடிநீர் பெறும் கிணறோ இல்லாதநிலையில்தான் இவர்களது சீவியம் நகர்கின்றது. ஒரேயொரு பொதுக்கிணறே அவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. மலசலகூடங்கள் வசதி படைத்த நான்கு குடும்பங்களிடமே உள்ளன. எவ்வித அனுமதியுமின்றி அத்துமீறி இவர்கள் இக்கிராமத்திலே தனியார் காணியில் வசிப்பதனால் உத்தியோபூர்வமாக உதவமுடியாத நிலையிலேயே பிரதேச செயலகமும் காணப்படுகின்றது.

அழியாச்செல்வமான கல்வியைத் தொடர்வதற்கு இங்கிருந்து அந்த வறிய மாணவர்கள் சுமார் மூன்று கிலோமீற்றருக்கும் அப்பாலுள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு மற்றும் தன்னாமுனை போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குத்தான் செல்ல வேண்டும். குறிப்பிட்டளவு தூரம் வெறும் மணல்வீதியாலும், காட்டுவழியினூடாகவும் சென்றே அக்கல்வியினைப் பெறவேண்டிய நிலை அம்மாணவர்களுக்கு உள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடியளவு உயர்தரம் படித்தவர்களே அங்கு காணப்படுகின்றனர்.

கிழக்கில் யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் கழிந்த நிலையிலும் இக்கிராம மக்களின் அபிவிருத்தியில் அரசு மற்றும் அரசசாரா அமைப்புக்கள் கவனம் எடுக்காதது என்னவென்று இம்மக்கள் வினாக்களைத் தொடுக்கின்றனர். எது எவ்வாறாயினும் அவர்களது நிலைமை மிகவும் மோசமான பாதிப்பிலேயே உள்ளது. இவர்களுக்கான



அனைத்து ஒத்துழைப்பினையும் வழங்க பிரதேச செயலகம் தயாராகவுள்ளபோதும் இவர்கள் அவர்களது வழிகாட்டல்களை ஏற்க மறுப்பதுதான் இவர்களது இந்த நிலைமைக்குக் காரணமென்கின்றனர் அரச அலுவலர்கள். எனவே இம்மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியது முக்கியமாகவுள்ளது. இம்மக்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் ஆதரவினை வழங்கி, இவர்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த ஏன் நாம் உதவக்கூடாது?

**மேகநாதன் சிவாஜி,**
**முருகன் கோவில் வீதி,**
**மண்டூர் - 02, மட்டக்களப்பு.**

## சமுதாய மேம்பாட்டில் பால்நிலை மற்றும் பங்கேற்பு தொடர்பான பயிற்சிநெறியில் பங்குபற்றிய இரு அணியினரையும், வளவாளர்களையும் கீழுள்ள படங்களிற் காணலாம்









# பெண்கல்விக்காய் மரணத்தின் எல்லைவரை சென்று மீண்ட மலாலா!



இவ்வுலகிலே தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யமுடியாத, உள்ளார்ந்தமான ஆசைகளைக் கூட அடைய முடியாத எவ்வளவோ பெண்கள் வீட்டுக்குள்ளேயே அடங்கி வாழ்ந்து வருகின்றமை எல்லா சமூகங்களிலும் இன்றுவரை தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கின்றது. சமூகத்திற்காக, மதத்திற்காக அடிமைகளாக வாழும் பெண்களின் தொகை மத்தியகிழக்கு நாடுகளிலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற இஸ்லாமிய நாடுகளிலும் அதிகம். கல்வியில் அவர்கள் ஓரளவு நல்லநிலைமையில் இருப்பினுங்கூட சமூகக்கட்டமைப்புக்கள் அவர்களது சமூக அசைவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையே. இவ்வாறிருப்பினும் அடிமைத்தனமான வாழ்வினை வாழ இக்காலத்தின் இளைய தலைமுறைகள் விரும்புவதில்லை. தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகத் தமது உயிரையும் பொருட்படுத்தாது துணிந்து செயற்படும் ஆண்களும் பெண்களும் இருக்கத்தான் செய்கின்றனர் என்பதற்கு மலாலா யூசுப்சாய் என்ற பதினாறு வயதுச் சிறுமியின் அசாத்தியமான செயற்பாடு நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

1997 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் மின்கோராவில் ஸ்வாட் மாவட்டத்திலே பிறந்தவள் மலாலா. தனது பாடசாலைக் கல்வியினைத் தனது தந்தையினால் நிறுவப்பட்ட பாடசாலையிலேயே தொடர்ந்து வந்தாள். சுற்றுலாத்தலமாக விளங்கிய அவர்களது பிரதேசம் காலப்போக்கில் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதனைத் தொடர்ந்து அங்கு பெண்கள் மீதான அடக்குமுறைகள் ஆரம்பமாகின. பெண்கள் ஆண்களின் பாலியற் தேவைகளை பூர்த்தி செய்பவர்களாகவும், வீட்டுவேலைகளைச் செய்பவர்களாகவும் குழந்தைகளை பெற்றுக் கொடுக்கும் இயந்திரங்களாகவுமே கருதப்பட்டனர்.



அவர்கள் மிருகங்களை விடவும் மோசமாக நடாத்தப்பட்டதுடன் கல்வி கற்பதற்கான தடையும் தலிபான்களால் விதிக்கப்பட்டன. பெண்கள் கல்வி கற்ற பாடசாலைகள் அனைத்தும் அவர்களின் சமயப் பயிலகங்களாக மாற்றப்பட்டன. இவையெல்லாம் மலாலாவின் மனதில் ஆழமான வெறுப்பினைப் தோற்றுவித்த அதேவேளை அவளது தந்தை ஒரு மாற்றுச்சிந்தனை கொண்ட ஆசிரியராகவிருந்த காரணத்தால் தனது மகளையும் வித்தியாசமாக வளர்வதற்கு வழிகாட்டினார். அதன் பயனாக 2008 இலே ஊடகவியலாளர் கிளப் ஒன்றிலே தனது மகளை தனது அடிப்படைக்கல்வியினை கிடைக்காமற் தடுப்பதற்கு தலிபான்களுக்கு என்ன தைரியமென்ற பொருள்படும்விதத்திலே சிறு உரையினை நடாத்துவதற்கு வாய்ப்பளித்தார். அதன் பின்னர் பீபீசியின் உருது இணையத்தளத்திலும் தனது தந்தையின் வழிகாட்டலின்பேரில் தலிபான்களால் மக்கள் எதிர்கொள்ளும் கொடுமைகளை மலாலா வெளியுலகிற்குத் தெரியப்படுத்தினாள். தலிபான்களின் அச்சுறுத்தல்களின் கீழ் அவளின் கல்வி மறுக்கப்படுவதனைக் குறிப்பிட்டு தகவல்களை வெளிப்படுத்தினாள். தனது பொதுவான மேடைப்பேச்சுக்களின்போது அவளின் உரிமை பற்றியும் கல்வியுரிமை பற்றியும் வெளிப்படையாகக் குரல் கொடுக்கத் தொடங்கினாள். இதனால் பலமுறை தலிபான்களின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டாள். இவளது செயற்பாடுகளுக்குக் கௌரவமளிக்கும் விதத்திலே 2011ஆம் ஆண்டிலே சிறுவர்களுக்கான சமாதானப் பரிசுக்காக இவளது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அவ் வருடத்திலேயே முதன் முதலாக பாகிஸ்தானின் தேசிய இளைஞர் சமாதானப் பரிசினையும் இவள் தட்டிச் சென்றாள்.

2012 ஆம் ஆண்டு சிறுவர் தின மாதமான ஒக்டோபரில் பாடசாலை விட்டு வீடு திரும்பும்போது வழியில், பஸ்ஸில் வைத்து தலிபான் போராளியால் சுடப்பட்டு, கோமாநிலைக்குச் சென்று உயிர் மீண்டாள். உயிருக்குப் போராடும் நிலையில் அவள் இருந்தபோது முழு உலகமுமே அவளுக்காய் துடித்தது-பிரார்த்தித்தது. அவைரதும் பிரார்த்தனையினால் அவள் மீண்டும் உயிர்பிழைத்தாள் சிகிச்சைக்காக இங்கிலாந்து சென்ற மலாலா தனது கல்வியினை அங்கேயே பர்க்கிங்காமில் தொடர ஆரம்பித்தாள். இதன்பின்னர் அவளுக்குப் பலதரப்பட்டவர்களின் ஆதரவுக்கரம் கிடைத்தது.

2013 இலே தனது பதினாறாவது பிறந்தநாளின்போது ஐக்கிய நாடுகள் சபையில் ஓர் உரையினை ஆற்றினாள். அதுமட்டுமல்லாது தனது சுயசரிதையினை "நான் யூசுப்சாய்: பெண்கல்விக்காக எழுந்து நின்று தலிபான்களால் சுடப்பட்டவள்" என்ற தலைப்பிலே வெளியிட்டாள். 2013 இலே உலகின் மிகவும் பிரபலமான இளவயதினள் என்ற பெயரினையும் தனதாக்கிக் கொண்டாள். ஐ.நா சபையின் சிறப்புத் தூதர் "கோர்டன் பிரவுண்" முன்வைத்த மனுவொன்றில் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் உலகிலுள்ள அனைத்துப் பாடசாலை செல்லும் வயதினரும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும், அந்த பிரசாரத்தினை "நான் மலாலா" என்ற பெயரிலிலேயே முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தார். இவ்வாறெல்லாம் இவளது செயல்கள் மக்களை ஈர்த்தாலும் இன்றுவரை தலிபான்கள் இவளையும் இவளது தந்தையினையும் இலக்காகக் கொண்டுள்ளனர் என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். இருப்பினும் மலாலா பெண்களின் கல்விக்கான ஓர் தீவிர ஆதரவாளராக இருப்பது வியக்கத்தக்கது. அதனை நன்றி பாராட்டுவதற்காக 2013 ஒக்டோபர் 10 ஆந்திகதி மலாலாவின் தொடர்ச்சியான சேவைக்காக ஐரோப்பிய பாராளுமன்றம் சுதந்திரமான சிந்தனைக்கான "சகரோவ் (Sakharov)" பரிசினை வழங்கிக் கௌரவித்தது. அதேநேரம் நோபல் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இறுக்கமான கட்டுப்பாடுகள் மற்றும் அடக்குமுறைகள் கொண்ட சமூகத்திலிருந்து வந்த இச்சிறிய பெண் இன்று தைரியமாகத் தனது உரிமையை விட்டுக்கொடுக்காது தனக்காகவும், தனது சமூகத்திற்கும் பெறுவதற்காகத் தனது உயிரையே துச்சமாக எண்ணிப் போராடுவது பாராட்டுதற்குரியதே. எல்லாச் சமூகங்களிலும் கட்டுப்பாடுகளும், சட்டங்களும் இருப்பது தவிர்க்கமுடியாததேயாயினும் அவை அளவுகடந்து தனியனின் உரிமைமீறலாக அமையும்போது அதனைத் தட்டிக்கேட்கும்விதத்தில் பெண்கள் இன்று மாறிவருகின்றனர் என்பதற்கு மலாலாவின் வாழ்க்கை எமக்கு நல்லதொரு பாடமாக அமைந்துள்ளதென்றால் அது மிகையல்ல.

**செ.ஐஸ்வர்யா,**
**கொம்னித் தெரு,**
**கொழும்பு.**

## எதிர்ப்பேன்... தப்பி ஓடுவேன்... தெரிவிப்பேன்...




இந்த தலைப்பே தலைவி வாசகர்களுக்கு ஒரு அபாயநிலையினைத் தெரிவித்து விடும். ஆம் நம் நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கெதிராக தெற்கிலுள்ள சில நிறுவனங்களுடன் விழுது முன்னெடுத்து வருகின்ற பிரசார நடவடிக்கையே இது. இதனை ஆங்கிலத்தில் "நோ-றன்-ரெல்" என்றும், தமிழில் அதாவது இம்சையினை என்மேல் மேற்கொள்பவர்களுக்கு இடம் கொடாமல் அவர்களை எதிர்ப்பேன் என்பதாகவும்; அதிலிருந்து தப்பி அங்கிருந்து ஓடுவேன் என்பதாகவும், அதன்பின் அதனை யாரிடமாவது உடனடியாகச் சென்று சொல்வேன் என்பதாகவும் இந்த பிரசாரம் விளக்கத்துடன் கூடிய விழிப்புணர்வினை சிறுவர்களுக்கு வழங்குகின்றது.

நம் சிறார்களுக்கு நல்ல தொடுகை – கெட்ட தொடுகையிலிருந்து தப்புதல் போன்ற விடயங்களினைக் கற்றுத் தருவதாகும். தற்போது மாவட்ட சமாசங்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் இதர அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இச்செயற்பாட்டினை முன்பள்ளிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், அறநெறிப் பாடசாலைகள், மதரஸாக்கள், சிறுவர் கழகங்கள் மற்றும் பூங்காக்கள் என பலவிடங்களிலும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பிரசார செயற்பாடுகளுக்காகச் சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்ஸ் மற்றும் "எஸ்கேப்" நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட "எனது உடல் எனக்கே சொந்தம்" என்ற விழிப்புணர்வு இறுவட்டு போன்ற பல்வேறு கருவிகள் இவ்விழிப்புணர்வு நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

---


## வேண்டும் மாற்றம் தாமதமின்றி !

பூவும், பொட்டும், மஞ்சள், குங்குமமும் பூதலத்தில் பூவையரைப் பொலிவுறச் செய்திடுவதுடன் அவர்களது அந்தஸ்தையும் உயர்த்திடும் என்பர். இன்னும் இந்த நான்கும் அவர்களுக்கு உயிர் போன்றது என்றம் கதை கூறிடுவர். காலநீரோட்டத்தில் காலன் வரவுகளும் உயிரைக் காவுகொள்ளும் நிகழ்வுகளும் இயற்கை நீதியென்றால் ஏன் இந்த வேண்டாக் கருத்துக்கள். பதியுடன் பல காலம் பதிவிரதையாய் வாழ்ந்தாலும் கணவனை இராணுவம் சிறையில் வைத்திருந்தால் அவளையும் விதவை என ஒதுக்குகின்றது நம் சமூகம். இதற்கு அவள் என்ன செய்வாள்? இதில் அவளது பங்கு என்ன? நானிலத்தார் நாடும் நற்கருமங்கள் அனைத்திலும் நாயகியாய் நின்ற நாயகிக்குப் பாருங்கள் நம் நாட்டின் அரசியல்சதியால் விளைந்த அநியாயத்தினை. அவளது உணர்வுகளைப் புரிந்திட நம் உறவுகள் என் பின்னிற்கின்றன? மரத்தால் விழுந்தவளை மாடேறி மிதிக்கலாமோ அல்லது மனமுடைந்து நொந்தவளை இன்னும் வதைக்கலாமோ? மாறவேண்டும் நாம் தாமதமின்றி. நம் உறவுகளின் துயரினைத் துடைக்க நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். வாருங்கள் அமராவிலே நாம் இணைந்து மக்கள் பணியாற்றுவோம்.

க. தனலெட்சுமி, திருமதி. பி. கமலநாதன்.
நாவற்குடா 168-C பிரிவு, விதவைகள் சங்கம்.
மட்டக்களப்பு.

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுடன் பட்டயமொன்றினைக் கொணர்வதற்காக ஆலோசனைகளைப் பெறுவதில் வட-கிழக்கில் ஈடுபட்டு வருகின்றது. ஆலோசனைக் கூட்டங்களின்போது பெறப்பட்ட சில புகைப்படங்கள்...**








# கவனத்திலெடுப்பார்களா நம் மக்கள் பிரதிநிதிகள்?

யாழ்மாவட்டத்திலே கைதடி பிரதேசம் விவசாயம், கைதடி நவீல்ட் பாடசாலை, ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் சாந்தி நிலையம் என பல விசேடமான அமைப்புக்களை உள்ளடக்கியவிதத்தில் பிரபல்யமானது. இத்தகைய சிறப்புமிக்க பிரதேசத்தின் ஓர்பகுதியிலே தனிமைப்படுத்தப்பட்ட கிராமமாக அமைந்துள்ளது கைதடி கிழக்கு நவபுரம். இக்கிராமம் கிட்டத்தட்ட பிரதான வீதியிலிருந்து ஆறு கிலோமீற்றர்கள் உள்நோக்கி அமைந்துள்ளது. கிட்டத்தட்ட நூற்றியிருபத்தைந்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்கின்ற நிலையில் அநேகமான மக்கள் கூலி, விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளனர். இக்கிராம மக்கள் வாழ்ககை பெரிதும் பரிதாபத்திற்குரிய நிலையிலேயே போய்க்கொண்டிருக்கின்றது. பயணஞ் செய்வதற்கு ஒவ்வாத கரடுமுரடான வீதிகள், நாளாந்த வாழ்க்கை நடத்துவதற்கே பொருத்தமற்ற வீடுகள், வசதிகள் குறைந்த பாடசாலை என்ற நிலைமையே அங்கு காணப்படுகின்றது. இங்கு கல்வி கற்பதற்கான ஆரம்பப் பாடசாலையொன்றே உள்ளது.



ஆறாந்தரத்தினைத் தொடர்வதற்கு அயற்கிராமத்திற்கு சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரம் சென்றே கல்வி கற்க வேண்டிய நிலையில் இங்குள்ள மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஏறத்தாழ நூறுக்கும் அதிகமான மாணவர்கள் அயற்பாடசாலைக்குச் செல்வதற்காக போக்குவரத்துச் செலவாக மட்டும் மாதாந்தம் ஆயிரம் ரூபா வரையில் செலவழிக்க நேரிடுகின்றது. இதனைச் செலுத்த முடியாதவர்கள் புனரமைக்கப்படாத, குண்டுங்குழியுமாகக் காணப்படும் வீதியால் சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே தம் கல்விநடவடிக்கையினைத் தொடர்கின்றனர். அதிலும் இம்மாணவர்கள் ஏறக்குறைய இரண்டு கிலோமீற்றர் தூரம் சனநடாட்டம் இல்லாத இடத்தினைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு செல்லும்போது பெண்பிள்ளைகள் மீது அநாவசியமான வார்த்தைப்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படும் நிலையும் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாம் கூலித்தொழிலாளிகளாக உள்ள பலரும் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடந்துசெல்ல வேண்டிய நிலையும் அவசரமெனில் தாம் உழைக்கும் காசினை ஓட்டோவுக்காகச் செலவிடவும் நேருகின்றது.

இந்த வீதியினைப் புனரமைப்பது தொடர்பாகப் பல அதிகாரிகளிடம் நீண்டகாலமாக் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. பல அரச அலுவலர்களுக்கும், நிறுவனங்களுக்கும் இவ்வாறானதொரு கிராமம் அங்கு உள்ளதென்பதே தெரியாது. எனினும் இக்கிராமத்தில் மக்களின் முயற்சியினால் சமூகமட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் என்பன இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அலுவலர்கள் சத்தியா மற்றும் கோமதி கைதடி கிழக்கு-நவபுரம் கிராமத்தில் தமது செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து இங்கு வாசகர்வட்டக்குழுவினை உருவாக்கினார்கள். இக்குழுவினூடாக நவபுரம் கிராமத்திலுள்ள பிரச்சினைகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவை தொடர்பான கலந்துரையாடல்களை வாசகர் வட்டத்தில் நடாத்தினர். இதன்வழி முதலில் மாதர்சங்கத்தினை வலுப்பெறச் செய்யும்நோக்கில் பயிற்சிகள், கலந்துரையாடல்களின்வழி மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அதன்வழி மக்களுக்கான செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டு திட்டங்கள் முன்வைக்கப்படடன. தமது போக்குவரத்துக்கான பிரதான வீதியினைப் புனரமைப்பதே அவர்களது முதலாவது செயற்றிட்டமாக அமைந்தது. எனவே இப்பிரச்சினை தொடர்பாக வாசகர் வட்டக்குழுவினருக்குப் பிரதேச சபையை எவ்வாறு அணுகுவது பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டு வழிகாட்டியதற்கேற்ப இவ்வீதிப்பிரச்சினைக்கு பிரதேச சபையுடன் தாமதமின்றித் தொடர்பு கொண்டுள்ளனர். மிக விரைவில் வீதி புனரமைக்கபடுமென்ற உறுதிமொழி பிரதேசசபைத் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.



வீதி ஒழுங்கற்ற நிலையிலிருப்பதனால் பேரூந்து சேவையும் தடைப்பட்டுள்ளது. ஒருவருடத்திற்கு முன்பு இக்கிராமத்திற்கு இலங்கை போக்குவரத்துசபையின் பஸ்சேவை நாளொன்றுக்கு நான்கு தடவைகள் இடம்பெற்றன. ஆனால் அச்சேவையும் திடீரென்று இடைநிறுத்தப்பட்டு விட்டது. அவர்களை அணுகிக் கேட்டபோது “முதலில் வீதியைத் திருத்தும்படி உரிய அதிகாரிகளிடம் சென்று கேட்டு, அதனைத் திருத்தி முடியுங்கள். தாமதமில்லாமல் நாம் பஸ் சேவையை ஆரம்பிக்கின்றோம் என்று விடையளிக்கின்றார்கள். இவ்வாறு மாறி மாறி ஒவ்வொரு அதிகாரிக்கும் கடிதம் கொடுப்பதே நமது வேலையாகிவிட்டது என்று சலித்துக் கொள்கின்றார்கள் இந்த வாசகர் வட்டத்தினர். பொறுத்திருந்து பார்ப்போம் வடமாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட நெல்சிப் திட்ட நிதியிலிருந்தாவது இவர்களது வீதியினைத் திருத்துவதற்கான ஒதுக்கீடு கிடைக்குமாவென்று?

## வடக்கைச் சேர்ந்த கிராம அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் போன்ற அமைப்புக்களுக்கு விழுது அமைப்பு விடுக்கும் வேண்டுகோள்

# வடக்கு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் வெற்றி பெறுவதனை உறுதி செய்வோம்!

இன்று எமது பாடசாலைகளில் கல்வி அடைவு மட்டங்களில் சிறந்து விளங்கி, பல்கலைக்கழகங்கள் புகுந்து பட்டதாரிகளாக படித்து வெளியேறுகின்றவர்களில் அதிகமானோர் யார் தெரியுமா? பெண்கள். இவர்களே பின்பு ஆசிரியர்களாகவும் அரச அலுவலகங்களில் சிரேட் உத்தியோகத்தர்களாகவும் எம்மத்தியில் பணி புரிகின்றனர்.

இத்தகைய அறிவும் ஆற்றலும் உடையவர்கள் பெண்கள் என நாம் ஒத்துக்கொள்கின்றோம். ஆனால், மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் பொருந்திய அரசியல் துறையில் அவர்களைக் காணக் கிடைப்பதில்லையே என்பதைப் பற்றி சிந்திக்கின்றோமா? இலங்கையில் எமது உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 2 வீதம் மட்டுமே. மாகாண சபைகளில் 4 வீதமாகவும் பாராளுமன்றத்தில் 5 வீதமாகவும் இது இருக்கின்றது. இதற்கு, எங்கள் நாட்டின் வாக்காளர்களில் 56வீதம் பெண்களாவர். பெண்கள் எல்லோரும் கூடி ஆண்களுக்கு வாக்களிக்கும் நிலைமையே இங்கு காணப்படுகின்றது

.பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு ஏராளமான தடைகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

- குடும்பப் பொறுப்புக்கள் பெண்கள் மீது பிரத்தியேகமாகச் சுமத்தப்படுவதால் சமூகத் தளங்களில் அவர்கள் இயங்க முடியாதவர்களாகின்றனர்
- அரசியல் ஆண்களுக்குரிய துறை என சமூகம் கருதும் பண்பாடு
- பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்குவதில் அரசியல் கட்சிகளின் ஆண் தலைமைத்துவங்கள் காட்டும் அலட்சியம்.
- பெண்கள் எதிர்நோக்கும் நிதிக்குறைபாடுகள்

இவ்வளவு குறைவாகப் பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதால் எமக்கு ஏற்படும் பின்னடைவுகளும் தீமைகளும்:

- சமமாக அரசியலில் செயற்படும் பெண்களின் உரிமை மீறப்படுகின்றது
- அரசியலில் வன்முறை அதிகரிக்கின்றது
- பெண்களினதும் அவர்கள் குடும்பத்தவர்களினதும் பிரத்தியேகமான தேவைகள் அரச கொள்கைத் திட்டங்களுக்குள் முறையாக சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.
- பெண்கள் கையாளக்கூடிய அவர்களுக்கே உரித்தான அணுகுமுறையும் அவர்களுடைய விவேகமும் எமது அரசியலில் இல்லாது போகிறது.

எனவே, பெண்கள் அரசியலில் ஈடுபடுவதனால் எமது முழு சமூகமும் நன்மை பெறும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். ஆயினும், இதனை நிறைவேற்றுவதற்கு, வாக்காளர்கள்தாம் முயற்சி எடுத்து பெண்களுக்கு வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும். இப்பொழுது முன்வரக்கூடிய சில பெண்களை அரசியலில் முன்னேற்றினால் மட்டுமே மேலும் பெண்கள் அதில் ஈடுபடும் வாய்ப்புக்களை நாம் அதிகரிக்க முடியும். இதற்கான அரிய வாய்ப்பினைச் சுமந்து கொண்டு வட மாகாணசபைத் தேர்தல்கள் எம்மை நாடி வந்திருக்கின்றன.

வாக்காளர்கள் பெண் வேட்பாளர்களுக்கு தமது வாக்குகளை அளிப்பது உறுதிப்படுத்தப்படுவதற்கு கிராம நிறுவனங்களும் ஏனைய அமைப்புக்களும் என்ன செய்யலாம்?

1. கிரமமாக நடக்கும் தத்தமது சங்கக் கூட்டங்களில் எதிர்வரும் தேர்தலைப் பற்றிய விழிப்புணர்வினைத் தமது உறுப்பினர்கள் மத்தியில் நிகழ்த்த ஒழுங்கு செய்ய வேண்டும்.

   அக்கலந்துரையாடல்களில் ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியமும் அவர்கள் பெண் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவமும் விளக்கப்படவேண்டும்.
2. அடுத்ததாக, இச்செய்தியினைச் சமூகத்துக்குக் கொண்டு செல்வது எப்படி என்கின்ற செயற்திட்டம் போடப்படவேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு உறுப்பினரும் தாம் ஆளுக்குப் பத்து நபர்களுடன் கலந்துரையாடுவதாக உறுதி கூறலாம். இதன்படி அயலவர் நண்பர்கள் சக பணியாளர்கள் எனத் தமக்கு வேண்டியவர்களுக்கு இச்செய்தியைக் கொண்டு போகலாம். அல்லது, ஊரிலுள்ள ஏனைய அமைப்புக்கள் சந்திக்கும் தினங்களில் அவற்றின் உறுப்பினர்களுடன் இது பற்றி உரையாடுவதற்கான திட்டத்தினை உருவாக்கலாம்.
3. எழுத்துத் திறன் கொண்டவர்கள் இருப்பார்களாயின், அவர்களைக்கொண்டு சகல பத்திரிகைகளிலும் ஒரு விருப்பு வாக்கையேனும் பெண் வேட்பாளருக்கு அளிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி எழுத வைக்கலாம்.
4. உங்கள் பிரதேசத்திலிருக்கும் ஊடகவியலாளர்களை அழைத்து சிறிய பத்திரிகை மாநாடுகள் நடாத்தி பெண் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளில் ஒன்றையேனும் அளிக்க வேண்டும் என்று பொது மக்களைக் கேட்டுக்கொள்ளலாம்.
5. மாதர் சங்கங்களின் உறுப்பினர்கள் தாம் கூட்டாகத் தெரிவு செய்த ஒரு பெண் வேட்பாளருக்கு தேர்தல் பிரசாரங்களில் உதவலாம். வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் வீடு வீடாகப் போய் வாக்குகள் கேட்கும் நிலையே இப்பொழுது இருக்கின்றது. அவ்வாறு அவர்கள் செல்லும் வேளைகளில் அவருடன் கூடச் சென்று பிரசாரம் செய்வதற்கு உதவியாக இருக்கலாம்.
6. வர்த்தக சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வர்த்தக ரீதியலான அமைப்புக்கள் தாம் தெரிவு செய்யும் ஏதாவதொரு கட்சியில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்குத் தேவையான தேர்தல் பிரசார நிதிகளின் ஒரு பங்கையாவது தந்துதவலாம்.

வடமாகாணத்தின் வாக்காளர்களுக்காக விழுது ஒரு செய்தியினை வடமாகாணசபைத் தேர்தற் காலத்தில் பிரசுரித்திருந்தது. பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் அது அமைந்திருந்தது. அது இங்கே எமது வாசகர்களுக்காகப் பிரசுரமாகின்றது.

வாக்காளர்களுக்கான விழிப்புணர்வினை செயற்படுத்துவதற்கான விடயங்களை விழுது அமைப்பு தந்துதவத் தயாராக இருக்கின்றது. "வாக்குகளால் பேசுங்கள்" என்னும் பதினைந்து நிமிடக் காணொளியும் "வாக்காளர்களின் உரிமைகளும் கடமைகளும்" என்னும் வாசகர் வட்ட வாசிப்பும் எம்மிடமுள்ளன. தேவையானவர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். வாசிப்பினை மின்னஞ்சலிலும் அனுப்பி வைப்போம்.

எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தல்களில் வாக்காளர்கள் தாம் தெரிவு செய்யும் எந்தவொரு கட்சியிலும் போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்கு தமது மூன்று விருப்பு வாக்குகளில் ஒன்றையேனும் அளிப்பதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.




அடுப்படியிலிருந்து அரசியல்வரை 50:50!

தொடர்புகளுக்கு:
விழுது, ஆற்றல் மேம்பாட்டு மையம்,
யாழ் மாவட்டக்கிளை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்: jaf.viluthu@gmail.com
Tel: 021-2229866

## புதுமைப்பெண்

விளக்கேற்றும் பெண்ணே நீ
எதற்கு வீழ்ந்து கதை பேச வேண்டும்?
அடிமைப் பெண்ணல்ல நீ
தாலிக்கயிறும் சரிபாதி உரிமையை உணர்த்தும்
சப்பித் துப்பும் நம்சமூகம் நாளை - உன்
விடிவைக் கண்டால் தாமதிக்காது கொண்டாடும்
உனக்குள் சிந்தி! நாளை சாதிப்பாய் நிறைய.

சோ.சக்தி, கடற்கரைச்சேனை, மூதூர்.

# தலைவியர் வரிசையில்.....

தற்துணிவும், ஆக்கமுங் கொண்ட சிலராற்தான் சமூகத்தில் மாற்றங்களைத் தோற்றுவிக்க முடிகின்றது. அவர்களைப் பின்பற்றும் சிலர் தாங்களும் சமூகத்தில் ஏதோவொருவிதத்தில் மாற்றங்களைத் தோற்றுவிக்க முனைகின்றனர். அப்படியானதொரு தலைவிதான் இந்த ஈஸ்வரி. யாழ்.மாவட்டத்திலே தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள



கைதடியில் நடுத்தரக் குடும்பமொன்றில் மூத்தமகளாகப் பிறந்தவர்தான் இவர். ஈஸ்வரி தன் சமூக சேவை மற்றும் பெண்கள் சார்ந்த முன்னேற்றச் செயற்பாடுகளால் யாழ் மாவட்டப் பெண்கள் சமாசத் தலைவியாகவும் தற்போது செயற்பட்டு வருகின்றார்.

தீபாவின் சமூகப் பணிகள் இன்று நேற்று ஆரம்பமானவையல்ல. அது அவரது மாணவப்பருவத்திலேயே வித்திடப்பட்டுள்ளது. தன் உயர்தரக் கல்வியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தபோதே முதலுதவிச்சேவை, ஊர்வலங்கள், உண்ணாவிரதம் என பல தன்னார்வச் செயற்பாடுகளிலும், சமூகப்போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்தியவர். குறிப்பாக, யாழ் மாவட்டத்தில் 1988ஆம் ஆண்டு க.பொத உயர்தர மாணவர்கள் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டபோது யாழ்.பல்கலைக்கழகம் முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு குரலெழுப்பியவர். யுத்தத்தின் நெருக்கடியான காலகட்டத்தின்போது அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கான முதலுதவிச் சேவைகளையும் அச்சமின்றி மேற்கொண்டவர்.

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைக் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் பாரிய குற்றமாகக் கருதப்பட்ட நிலையில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தீபா ஆறு மணித்தியாலங்கள் வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். முதன் முதலாக பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (MPCS) தலைவி என்ற அந்தஸ்தை தென்மராட்சியிலே பெற்றுக் கொண்டார். நோர்வேயினால் நிதியுதவி வழங்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலமாக சுகாதாரம் மற்றும் போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அத்தகைய தேவை நிலவும் பிரதேசங்களை இனங்காணல் என இன்னோரன்ன செயற்பாடுகளை மக்களுக்காக மேற்கொண்டார். வன்னி சென்றும் தன் பணிகளைத் தொடர்ந்து, அங்கு பாதிக்கப்பட்ட ஒருவரைத் திருமணமும் செய்து தன் இலட்சியத்தினை நிறைவேற்றினார்.

தீபாவின் வாழ்வில் திருப்புமுனையொன்றினை ஏற்படுத்தியவர் "சொண்ட்" என்ற அரசசார்பற்ற நிறுவன அலுவலர் சுபா அவர்கள். இவர் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை வடக்கில் வசிக்கும்போது அப்பகுதிக்கு நீண்டகாலமாகக் கிராமசேவையாளரொருவர் நியமிக்கப்படாதநிலையில் அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனால் அப்பகுதிக்கு ஒரு கிராமசேவகரை நியமிக்க வேண்டுமென்ற நோக்கில் கையெழுத்து வேட்டையில் அவர் இறங்கியவேளையில் சுபாதான் இவரை வழிகாட்டி அங்கேயொரு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கமொன்றினை உருவாக்க வழிகாட்டி உதவினார். அதன் மூலம் அவ்வூர் மக்கள் தமது கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொண்டனர். 2004 இலே உருவான வண்ணார்பண்ணை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இன்றுவரை இடையறாது தன் பணிகளைச் செவ்வனே முன்னெடுத்து வருகின்றது.



2009ஆம் ஆண்டில் தீபா இச்சங்கத்திற்குத் தலைவியானதிலிருந்து இச் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. மக்களுக்கான அரச மற்றும் இதர உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல், வங்கிகள் ஊடாகப் பெண்களுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், மாணவருக்கான இலவச வகுப்புக்களை நடாத்துதல் என பற்பல செயற்பாடுகளைத் தனது தலைமையின் கீழ் பெற்றுக் கொடுத்தார். திருநெல்வேலி இலங்கை வங்கியுடன் இணைந்து இப்பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கல்வி கற்கும் மாணவர்களுக்காகப் பத்து சைக்கிள்களை பெற்றுக் கொடுத்து, அவர்களது கல்விச்செயற்பாட்டுக்கு உதவினார்.

சமுர்த்தி சங்கச் செயலாளராகவும் இவர் செயற்பட்டுள்ளார். இதன்வழி பல சேவைகளை தம் மக்களுக்காகச் செய்துவந்த நிலையில் 2011ஆம் ஆண்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட யாழ் மாவட்டப் பெண்கள் சமாசத்தின் தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டார். ஏற்கனவே விழுது நிறுவனத்தின் வாயிலாகப் பல பயிற்சிகளைப் பெற்று தன்னை வலுப்படுத்தியுள்ள அவர் இதர நிறுவனங்களினால் வழங்கப்படும் பயிற்சிகளிலும் தவறாது கலந்து கொள்கின்றார். இதன்பயனாகவே தனக்குக் கிடைக்கின்ற அனுபவம், பயிற்சிகள் மற்றும் அறிமுகங்கள் மூலமாகப் பல சங்கங்களை ஒன்றிணைத்து பிரதேசரீதியாகவும், மாவட்டரீதியாகவும் தன் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். சர்வதேச தினங்களினை அனுஷ்டித்தல், பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடல் என பல செயற்பாடுகளைத் திறம்படத் தானே முன்னின்று முன்னெடுத்து வருகின்றார். தவறாது பயிற்சிகளில் கலந்து கொள்ளும் இவர் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் நல்ல உறவுகளைப் பேணிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**விழுது இனங்கண்டுள்ள தலைவியரின் வரிசையில் இம்முறை தலைவியினை அலங்கரிக்கின்றார் யாழ்.மாவட்டத்தின் பெண்கள் சமாசத் தலைவியும், வண்ணார்பண்ணை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவியுமான திருமதி ஈஸ்வரன் ஈஸ்வரி. தீபாக்கா என்று அனைவராலும் அழைக்கப்படும் இவரைத் தலைவியில் இம்முறை அறிமுகப்படுத்தி வைப்பதில் நாம் பெருமையடைகின்றோம்.**


யாழ்.மாவட்டத்திலே சர்வதேசரீதியாக முன்னெடுக்கப்பட்ட பெண்களின் வன்முறைக்கெதிரான பிரசார நிகழ்வான "நூறுகோடி எழுக" நிகழ்வினை விழுதின் வழிகாட்டலுக்கமைய தனது தலைமையில் நடாத்தி அனைவரது கவனத்தினையும் சமாசத்தின்பாற் திருப்பிய பெருமையும் இவரையே சாரும். இதற்கான ஊர்வலம் நல்லூர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி சட்டநாதர் சிவன் கோயில் திவ்யஜீவன சங்க மண்டபம் வரை அறுநூறுக்கும் மேற்பட்ட ஆண்-பெண்களின் பங்குபற்றலுடன் அமைதியாக இடம்பெற்று, மெழுகுவர்த்தி ஏந்தி சத்தியப்பிரமாணமும் செய்துகொள்ளப்பட்டது. சர்வதேச மகளிர் தினத்தினை அரசாங்க அதிபரை அழைத்து மிக விமரிசையாக பல சங்கங்களின் பங்குபற்றலுடனும், நிகழ்வுகளுடனும் நடாத்தி பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான பாலியற் துஷ்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெற நாட்டிலும் சரி வீட்டிலும் சரி சரியான தலைமைத்துவம் இன்மையே காரணமென்கின்றார் தீபா. இதற்காகவே எங்கே எந்த வன்முறை நடந்தாலும் அங்கே இவரைக் காணமுடியும். பாதிக்கப்பட்டவருக்காகக் குரல் கொடுப்பதில் தயக்கமின்றி முன்வருவபர் இவர். போரினாற் பாதிக்கப்பட்ட இளம்விதவைப் பெண்களுக்கான மறுமணம் ஊக்குவிக்கப்படல் வேண்டும். அது மட்டுமல்லாமல் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான போரங்கள் அமைக்கப்பட்டு அவர்களது பிரச்சினைகள் மையப்படுத்தப்பட வேண்டும் என்றும் கிராமங்கள்தோறும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றார். மகளிர் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து செயற்படுவதன்வழி பெண்கள் சார்ந்த பிரச்சினைகள் ஓரளவாவது குறைக்கப்படுமென்று தன் ஆதங்கத்தினையும் கூறுகின்றார் தீபா என்கின்ற ஈஸ்வரி. இவரது பணிகள் இன்னும் காத்திரமானதாக அமைய விழுது சார்பாகவும் என்போன்ற மகளிர் சார்பாகவும் வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.



செல்வி. அ. பிரியந்தினி,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

# வாசகர் கடிதங்கள்



## நன்றிகள்!

கல்லறைக்குள் முடங்கிக் கிடந்த பெண்விடுதலையைத் தட்டியெழுப்பி, 'சோர்ந்து கிடந்த பெண்ணே எழுந்திரு! ஒரு நிமிடமாவது உன் விடிவுக்காய் சிந்தித்துக்கொள்! எனக்கூறி எங்களையுருவாக்கிய உனக்கு எமது நன்றிகள்!

தேவகிப்பிள்ளை,
மல்லிகைத்தீவு, மூதூர்.

## பாராட்டுகிறோம்

கானல்நீராய்க் காணாமற்போன பெண்களின் விடியலைத் தட்டித் தந்தாய். நீயும் ஒரு பாரதிதான் உன் பணி தொடர எமது வாழ்த்துக்கள்.

S.சக்தி,
கட்டைபறிச்சான் - 07, மூதூர்.

## தலைவியே உன்னுடன் ஒரு நிமிடம்!

பெண்ணின் விடிவுக்காய்ப் பாடுபடும் உன்னை வரலாற்றின் சின்னமாகப் போற்ற வேண்டுமென ஆசைப்படுகின்றேன். உனது காற்பாதம் என்றும் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

ஞா.மல்லிகாதேவி,
மாவலி வாசகர் வட்டம்,

## வேண்டுமடி நீ எமக்கு!

அன்புத் தோழியே வேண்டுமடி நீ எமக்கு
உன் வரவால் இன்று நாம் ஓங்கியே நிற்கின்றோம்
எம்மைத் தேடி வந்த உன்னை நாம்
இரு கரம் ஏந்தி வரவேற்கின்றோம்.

இன்றைய பொழுது வெளுத்தது போல்
நாளைய பொழுதையும் ஆக்கிடுவாய்.
தலைவி என்னும் பத்திரிகையாய் வாழ்ந்து
வந்தாய் எம்மிடத்தில்.

காலாண்டாய் உன் வருகைக்காகக் காத்திருப்போம்,
முடங்கிக் கிடக்கும் எம் செயலின் முற்றுகை நீயும் தளர்த்திடுவாய்
முஸ்லிம் பெண்கள் போரத்தின் வெற்றிக்
கொடியை உயர்த்திடவே என்றும் நாங்கள் இணைந்திடுவோம்

**நவாசியா நஸார்,**
**நெழும்புர, பொலனறுவை**

# பெண்களுக்கான தேர்தல் நிதியம்

விழுது நிறுவனமானது சமூக மட்ட அமைப்புக்கள் தமது பிரதேசத்தில் போட்டியிட விரும்பும் பெண்களுக்காகத் தேர்தல் நிதியமொன்றினை (Election fund) ஆரம்பித்துள்ளமை பற்றி முன்னைய ஐந்து இதழ்களிலும் குறிப்பிட்டிருந்தோம். இவர்களுக்காக உதவும் முகமாக அதற்கான வங்கிக் கணக்கொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு உதவும் சமூகமட்ட அங்கத்தவர்கள், வாசகர் வட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பங்களிப்பினை வெளியிடப்படும் தலைவி இதழ்களில் வெளியிட்டு வருகின்றோம். குறித்த பகுதியிலிருந்து கிடைத்த தொகை அப்பிரதேசத்தில் போட்டியிடும் பெண்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும். இதற்கான ஆவணங்கள் அனைத்தும் வைப்பிலிடுபவர்களிடமும், அதன் பிரதி தலைமைக்காரியாலயத்திலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட தொகையினை எட்டும் பட்சத்தில் இத்தொகையினை நாம் மாவட்டங்களிலுள்ள சமாசங்களிடம் ஒப்படைத்து விடுவோம். அவர்களே தொடர்ந்து இதனைச் செயற்படுத்தி வருவர். அவர்களினால் எமக்கு அனுப்பப்படும் விபரங்கள் தவறாது தலைவியில் வெளியிடப்பட்டு வரும். எனவே நீதிக்காகப் போராடும் பெண்களுக்கு அரசியலில் இடம் கிடைக்கவேண்டுமென விரும்பும் உள்ளங்களும், சமூகமட்ட அமைப்புக்களும் மற்றும் பிற நிறுவனங்களும் இன்றே உங்கள் பங்களிப்பினை நல்க முன்வாருங்கள். நீங்களும் பங்களிப்புச் செய்யலாம். உங்கள் தொகையினைப் பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம்.

கணக்கு இலக்கம்: 1100022753,
வெள்ளவத்தை கிளை, கொமர்ஷல் வங்கி.

| | |
|---|---|
| மட்டக்களப்பு விழுது உத்தியோகத்தர்கள | 280.00 |
| திருகோணமலை விழுது உத்தியோகத்தர்கள் | 500.00 |
| வண்ணார்பண்ணை வட-மேற்கு மா.கி.அ.சங்கம் | 50.00 |
| கைதடி தெற்கு மா.கி.அ.சங்கம் | 50.00 |
| சில்லாலை மா.கி.அ.சங்கம் | 100.00 |
| நாவற்குழி மா.கி.அ.சங்கம் | 100.00 |
| மாதகல் கிழக்கு மா.கி.அ.சங்கம் | 50.00 |
| ஆனைக்கோட்டை மா.கி.அ.சங்கம் | 50.00 |
| கைதடி நுணாவில் | 200.00 |
| யாழ்.மாவட்டப் பெண்கள் சமாசம் | 200.00 |
| யாழ்.விழுது உத்தியோகத்தர்கள் | 750.00 |
| மொத்த தொகை | 17,200.00 |

# விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்திடமிருந்து...

அன்புத்தோழியரே!

உங்களது சங்கங்களினது முன்னோடியான செயற்பாடுகள் தொடர்பான விடயங்களினை எமக்குச் சான்றுகளுடன் அனுப்பி வையுங்கள். அவற்றின் நம்பகத்தன்மைக்கு நீங்களே பொறுப்பாளிகள். உங்களது ஆக்கங்களினை நீங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விழுதின் கிளைகளிலேயும் கையளிக்கலாம். அங்கிருந்து தலைவி செய்திமடலினை இலவசமாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கங்கள் பற்றிய உங்கள் சுதந்திரமான, காத்திரமான கருத்துக்களினை நாம் வரவேற்கின்றோம். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் உங்கள் ஆக்கங்களினை உறுதிப்படுத்தல்களுடன் அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம். உங்கள் ஆக்கங்கள், கருத்துக்கள் வந்தடைய வேண்டிய முகவரி:

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்,
இல 03, ரொறிங்ரன் அவனியூ, கொழும்பு – 07
ஈமெயில்: info@viluthu.org
தொ.பே/பக்ஸ்: 0112506272/ 0112585190